Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 19.10.2024 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

நாள் 19.10.2024 சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் தேசிய கற்றல் வார நிகழ்ச்சியை தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார்.

ஆப்ரிக்க நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று தாயகம் திரும்ப உள்ளார்.

கல்வி வணிகமயமாக்கல், கல்வியின் தரத்தை மோசமாக பாதிக்கிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளா ார்.

யூபிஐ போன்ற டிஜிட்டல் நடவடிக்கையின் மூலம் உலக அளவில் பொருளாதாரத்தில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்திருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் உலக வங்கி நிதியுதவித் திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தலைமையில் நடைபெற்றது.

மோடி (14 )

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் தேசிய கற்றல் வார நிகழ்ச்சியை தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார். குடிமைப் பணியாளர்களுக்கு அமைப்பு ரீதியான திறன் மேம்பாட்டிற்கு தேசிய கற்றல் வாரம் வழி வகுக்கிறது. மேலும், தனி நபர்களுக்கு புதிய உத்வேகம் அளிப்பதே தேசிய கற்றல் வாரத்தின் நோக்கம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. தேசிய கற்றல் வாரத்தையொட்டி மத்திய அமைச்சகங்கள், துறைகள் மற்றும் நிறுவனங்கள் சார்பில் துறைசார்ந்த போட்டித் திறனை மேம்படுத்தும் விதமாக கருத்தரங்குகள், மற்றும் பயிலரங்குகள் நடைபெறவுள்ளன. புதுடெல்லியிலுள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் தேசிய கற்றல் வாரத்தை பிரதமர் இன்று தொடக்கி வைக்க உள்ளார். கடந்த 2020ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மிஷன் கர்மயோகி திட்டம் பிரதமர் திரு. நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டது. இது ஒரு வலுவான டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பின் உதவியுடன் குடிமக்களை மையமாகக் கொண்டு செயல்படும் திட்டமாகும்.

மோடி ரஷ்யா (19 )

2 நாள் பயணமாக பிரதமர் திரு. நரேந்திர மோடி வருகிற 22ஆம் தேதி ரஷ்யா செல்லவுள்ளார். ரஷ்யாவில் நடைபெறும் 16ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் அவர் பங்கேற்று உரையாற்றுகிறார். இதில் பிரேசில், சீனா, இந்தியா, தென்னாப்பிரிக்கா, மற்றும் ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் பங்கேற்க உள்ளன. உலகளாவிய வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்கான பன்முகத்தன்மையை வலுப்படுத்துதல் குறித்து இந்த மாநாட்டில் பங்கேற்கும் தலைவர்கள் விவாதிக்க உள்ளனர். மாநாட்டிற்கு இடையே, பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திரமோடி இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வளர்ந்த மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடும் போது பிரிக்ஸ் குழுவானது அதன் அளவு மற்றும் ஒப்பீட்டு அளவில் வேகமான வளர்ச்சியைக் கண்டுள்ளதாக, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். மாஸ்கோவில் நேற்று நடைபெற்ற, பிரிக்ஸ் வர்த்தக மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர் உலக பொருளாதார வளர்ச்சிக்கு தங்கள் கூட்டமைப்பில் உள்ள நாடுகள் தான் முக்கிய உந்து சக்தியாக உள்ளன என்று கூறினார். எதிர்காலத்தில் பிரிக்ஸ் கூட்டமைப்பானது

உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முக்கிய பங்காற்றும் என்றும் அவர் தெரிவித்தா◌ா◌்.

முர்மு (11 )

ஆப்ரிக்க நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தனது பயணத்தின் இறுதி நாளான இன்று மலாவியில், கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட்டா◌ா◌். மலாவியில் அமைந்துள்ள ஸ்ரீராதாகிருஷ்ணர் கோவிலிலும் அவர் தரிசனம் செய்தார். முன்னதாக, மலாவியில் அந்நாட்டு அதிபரைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இருநாடுகளுக்கிடையே கலை மற்றும் கலாச்சாரம், இளைஞர் நலம், மற்றும் மருந்துகள் ஆகிய துறைகளில் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. தமது பயணத்தை முடித்துக்கொண்டு அவர் இன்று புதுடெல்லி திரும்ப உள்ளார்.

தன்கர் (13 )

கல்வி வணிகமயமாக்கல், கல்வியின் தரத்தை மோசமாக பாதிக்கிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளா◌ார். இன்று ராஜஸ்தானில் சிகாரிலுள்ள ஒரு தனியார் கல்வி நிறுவனத்தின் விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், கல்வி வணிகமயமாக மாறுவது தேசத்தின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்றும் தெரிவித்தார். கல்வி ஒருபோதும் வருமானம் ஈட்டும் ஆதாரமாக இருக்கவில்லை என்றும், அது தியாகம், தொண்டு செய்யும் ஊடகமாகவும், ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டி எழுப்பவும் உள்ளது என்றும் கூறினார். இன்று கல்வி ஒரு பண்டமாக மாறிவிட்டது என்றும், அது லாபத்திற்காக விற்கப்படுகிறது என்றும் திரு. தன்கர் தெரிவித்தார். மாணவர்கள் கல்விக்காக வெளிநாடு செல்ல விரும்பினாலும், இந்தியாவில் ஏராளமான வாய்ப்புகள் இருப்பதாகவும், நிறுவனங்கள் மற்றும் தொழிலதிபர்கள் இது குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ராஜ்நாத் சிங் (17 )

எதிர்கால சவால்களை சமாளிக்கும் வகையில் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட ராணுவத்தை உருவாக்குவதில் அரசு கவனம் செலுத்தி

வருவதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் தேசிய பாதுகாப்பு கல்லூரியின் 62ஆவது ஆண்டு நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், உலகளாவிய எதிர்கால அரசியல் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு சிறந்த வழி நடத்தும் திறன் கொண்ட சிந்தனையாளர்களாக செயல்படுமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். போர் முனையானது இன்று பாரம்பரிய போர்க்களங்களை விஞ்சி பல கள சூழல்களை கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதில் இணையதள தாக்குதல், தகவல் போர், போன்றவையும் முக்கியமானது என்றும் அவர் கூறினார். இணையதள தாக்குதல்கள் தவறான தகவல் பிரச்சாரங்கள், பொருளாதாரப் போர், ஆகியவை ஒரு தோட்டா கூட சுடப்படாமல் ஒரு முழு தேசத்தையும் பாதிப்புக்கு உட்படுத்தக்கூடியவை என்றும் அவர் குறிப்பிட்டார். சிக்கலான பிரச்சனைகளை பகுப்பாய்வு செய்து புதுமையான தீர்வுகளை உருவாக்கும் திறமை ராணுவ அதிகாரிகள் கொண்டிருக்க வேண்டியது அவசியம் என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளர்.

நிர்மலா சீதாராமன் 1 (19 )

யூபிஐ போன்ற டிஜிட்டல் நடவடிக்கையின் மூலம் உலக அளவில் பொருளாதாரத்தில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்திருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அரசுமுறை பயணமாக மெக்சிகோ நாட்டிற்குச் சென்றுள்ள அவர், அந்நாட்டின் தலைநகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்றுப் பேசினார். அப்போது இருநாடுகளுக்கு இடையேயான ஆழமான ஒத்துழைப்பில் பல்வேறு துறைகளின் மேம்பாட்டிற்கு அடித்தளம் அமைத்திருப்பதாக தெரிவித்தார். பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்ட ஒத்துழைப்பில் இருநாடுகளுக்கும் மகத்தான எதிர்பார்ப்புகள் இருப்பதாக அவர் தெரிவித்தார். உற்பத்தி, மருந்து, உள்ளிட்ட துறைகளில் முதலீடு மற்றும் மேம்பாட்டிற்கான அதிக அளவிலான வாய்ப்புகளை இந்தியா வழங்கி இருப்பதாக அவர் தெரிவித்தா◌ா◌. யுபிஐ போன்ற டிஜிட்டல் தொழில்நுட்பங்களை இந்தியா பயன்படுத்துவதால் டிஜிட்டல் பொருளாதாரத்தில் முன்னணி வகிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியா-மெக்சிகோ இடையிலான நட்புறவு பலமான அடித்தளததிற்கு வித்திட்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் முதலீடு செய்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும், தொழில்புரிவதற்கு உகந்த சூழ்நிலையை மத்திய அரசு ஏற்படுத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிர்மலா சீதாராமன் 2 (3 )

நிகழ்ச்சியில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பங்களும் கையெழுத்தாகின. பின்னர், அந்நாட்டு நிதித்துறை செயலாளரையும் திருமதி நிர்மலா சீதாராமன் சந்தித்துப் பேசினார்.

உலக வங்கி ஆலோசனை -புதுச்சேரி 1 (16 )

புதுச்சேரியில் உலக வங்கி நிதியுதவித் திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு துணைநிலை ஆளுநர் திரு. கே. கைலாஷ்நாதன் தலைமையேற்றார். கூட்டத்தில் உலக வங்கியின் நிதியுதவி பெறும் திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக, புதுச்சேரி மாநில கடற்கரையை சீரமைப்பதன் மூலம், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. புதுச்சேரி கடற்கரை பாதுகாப்பு மற்றும் கடலோர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உலக வங்கி உதவியுடன் ஆயிரத்து 439 கோடி ரூபாய் செலவில் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறையால் முன்மொழியப்பட்ட திட்டம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. குடிநீர், கழிவுநீர் மேலாண்மை, மழைநீர் வடிகால்கள் மற்றும் சாலை இணைப்பு கட்டமைப்பை மேம்படுத்த பொதுப்பணித்துறை மூலமாக ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் 4ஆயிரத்து 570 கோடி ரூபாய்

செலவில் செயல்படுத்தப்பட உள்ள திட்டம் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. புதுச்சேரி அருகேயுள்ள கரசூர் தொழிற்பேட்டை மேம்பாட்டு பணிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

உலக வங்கி ஆலோசனை -புதுச்சேரி 2 (5 )

பிரதமரின் ஒரு மாவட்டம், ஒரு உற்பத்திப் பொருள் திட்டம் குறித்தும் தொழில் துறை மூலமாக பிரதமர் ஒற்றுமை வணிக வளாகத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட உள்ள வணிக வளாகம் பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து, உலக வங்கி நிதியுதவியின் கீழ் பொதுப்பணித்துறையில் நடைபெறும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மாசுக் கட்டுப்பாட்டு குழுமம் (15 )

தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் வேளையில் மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் விளக்குகளை ஏற்றி புகையில்லா தீபாவளியைக் கொண்டாடுவோம் என்று புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம் அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக மாசுக்கட்டுப்பாட்டு குழுமம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உச்ச நீதிமன்றத்தின உத்தரவுப்படி புதுச்சேரியில் தீபாவளிப் பண்டிகைக்கு 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு

வெடிக்க அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காலை 6 மணி முதல் 7 மணி வரையிலும், இரவு 7 மணி முதல் 8 மணி வரையிலும் பட்டாசு வெடிக்க அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அமைதிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட மருத்துவமனைகள், வழிபாட்டுத்தலங்கள், கல்விக்கூடங்கள் மற்றும் நீதிமன்ற வளாகத்தின் சுற்று வட்டாரங்களில் 100 மீட்டருக்குள் பட்டாசு வெடிக்கக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பிறருக்கு இடையூறு இல்லாமல் இனிப்புகள் வழங்கி, விளக்குகளை ஏற்றி புகையில்லா தீபாவளியைக் கொண்டாடுவோம் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஸ்டாலின் (13 )

போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியம் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளா◌ர◌ சென்னையில் இன்று நடைபெற்ற தென்மாநில காவல்துறை இயக்குநர்கள் மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், தமிழகத்தில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை காவல்துறையினர் முனைப்புடன் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தா◌ர◌ போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். பிற மாநிலங்களிலிருந்து வதந்தி பரப்புவோர் மீது

தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் கூறினார். மேலும் இணைய வழி குற்றவாளிகளை பிடிக்க மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை அவசியம் என்றும் திரு. ஸ்டாலின் தெரிவித்தார்.

வானிலை (4 )

வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வரும் செவ்வாய்கிழமை உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் தேசிய கற்றல் வார நிகழ்ச்சியை தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார்.

ஆப்ரிக்க நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று தாயகம் திரும்ப உள்ளார்.

கல்வி வணிகமயமாக்கல், கல்வியின் தரத்தை மோசமாக பாதிக்கிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளா◌ார்.

யுபிஐ போன்ற டிஜிட்டல் நடவடிக்கையின் மூலம் உலக அளவில் பொருளாதாரத்தில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்திருப்பதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் உலக வங்கி நிதியுதவித் திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தலைமையில் நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.RM/KR/VM

Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 19.10.2024 / Script